www.tamilarangam.net

# சக்தி

மலர் - 4

4 UDGAVE




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர் - 4

அட்டைப் படம்.
விளக்கம்:
நீயா?
அமைதி காக்க வந்த நீயா?!
இன்னும் என்னடா இருக்கு
இழப்பதற்கு...?
என் உயிரைத் தவிர.
★ தீவா ★



## உள்ளடக்கம்:


1. ஆசிரியர் பக்கம் ........................ 1
2. கண்ணீர் அஞ்சலி ........................ 2
3. திருக்குறள் விளக்கவுரை ................ 3
4. வாசகர் அரங்கம் ........................ 4
5. உண்மைகள் விழித்தபோது (சிறுகதை) ..... 6
6. அதிர்ச்சிச் சிகிச்சை ..................... 11
7. குறுக்கெழுத்துப் போட்டி: இல: 4. ........ 12
8. சிரிக்கச்சிந்திக்க. (சிக்கனம்) ........... 15
9. சிறுவர் அரங்கம் ........................ 17
10. X-RAY (சென்ற இதழ்த் தொடர்ச்சி) .... 23
11. மனிதகுலமே வெட்கப்படு (கவிதை) .... 26
12. வணங்கியதெல்லாம் யாருக்காக? (சிறுகதை) 28
13. சாதனை படைத்திடுவீர் - (கவிதை) ....... 31
14. விதைத விஞ்ஞானி (ஆறுவழிக்கதை) .... 33
15. சஞ்சீவியின் பக்கம் ..................... 34
16. Nordisk Teaterlaboratorium ..... 38
17. புலச் சூழலில் தனிமனித பாதிப்பு. ...... 43
18. பயம் நம் மனதினில் (கவிதை) ... 44
19. புறப்படு நண்பா (கவிதை) ........ 45
20. Indian Vil du ikke Tænke på (கவிதை) 46
21. சிந்தைக்கு விருந்து ..................... 47
22. புதிய ஓவியர் பக்கம் ................... 49


தமிழ்-டனிஷ் நட்புறவுச் சங்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் பக்கம்

சஞ்சீவியின் நான்காவது மலர் வெளிவந்திடும் வேளையில் உங்களில் எத்தனை பேர்களின் கைகளுக்குக் கிடைத்துள்ளது, என்பதைவிட, எத்தனை பேர் சஞ்சீவியை முழுமையாக படிக்கின்றீர்கள்! என்பதே மிகவும் அவசியம். சஞ்சீவி என்ன சொல்ல வேண்டும்! சஞ்சீவிக்கு நீங்கள் எதைச் சொல்ல விரும்புகின்றீர்கள்! என்பது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

டென்மார்க் வாழ் ஒவ்வொரு தமிழர்களின் பிரச்சினைகளும் வேறுபட்டவைகளாயிருந்த நிலையிலும் எமது இளைய தலைமுறையினரின் தமிழ் ஆற்றலை, திறமையினை வளர்ப்பதும், பாதுகாப்பதும் எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். டென்மார்க் போன்ற அன்னிய நாட்டில் சஞ்சீவியின் தேவையினை நீங்கள் உணர்ந்து கொள்வதிலும், உங்கள் ஆதரவிலும் தான் சஞ்சீவியின் வளர்ச்சி தங்கியுள்ளது எனலாம்.

நாளாந்த பிரச்சினைகளையும், நிலைமைகளையும், நடைமுறை வாழ்க்கையிலேயும் எழுதுபவன் எழுத்தாளன் ஆகின்றான். இந்த வகையில் நீங்கள் ஒவ்வொருவரும் எழுத்தாளராக வேண்டும். புதிய எழுத்தாளர்களின், இளையர்களின் பிரவேசம் சஞ்சீவியின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். எனவே உங்கள் ஒவ்வொருவரையும் ஒத்துழைப்புத் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது சஞ்சீவிக்கு ஒத்துழைப்புத் தந்துதவும் வாசகர்கள், எழுத்தாளர்கள், இளையர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

— பத்திரிகைக் குழு —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி



வவுனியாவில் பிறந்தவரும், திருமலையில் வாழ்ந்தவரும் கடந்த மூன்று வருடங்களாக "கோப்பன் ஹாகனில்" வசிக்கும் பீற்றனைச் செல்லமாக அழைக்கப்படும் தம்பிராஜா-யோகராஜா 4.10.89 காலமானார்.

இயற்கையாகவே மூளையிலிருக்கும் நரம்பு ஒன்றின் பாதிப்பினால் 27.9.89 சேர்க்கப்பட்ட இவர் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து 4.10.89 வரை சுயநினைவில்லாமலேயிருந்து பிற்பகல் சுமார் 3.10 மணியளவில் இவ்வுலகை விட்டுச் சென்றார்.

அன்னாரின் பூதவுடல் 21.10.89 சனிக்கிழமை டென்மார்க்கில் அடக்கம் செய்யப்பட்டது.

இவரை இழந்து தவிக்கும் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் சிநேகிதர்களுக்கும் "சஞ்சீவியின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சஞ்சீவி பத்திரிகைக்குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# திருக்குறள் விளக்கவுரை

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.**

பதவுரை: வினைவேறு - செயல்வேறு. சொல்வேறு - மொழிவேறு. பட்டார் - பட்டவரின். தொடர்பு - நட்பு. கனவினும் - நனவில் மட்டும் அன்றிக் கனவிலும். இன்னாது - துன்பம் செய்வதாகும். மன், ஓ; அசைகள்.


விளக்கவுரை: செயலும் சொல்லும் ஒன்றுபடாதவரின் நட்பு, கனவிலும் துன்பந்தருவதாகும்.

தீநட்பு
குறள் இல: 9 [ஒன்பது]



www.tamilarangam.net

# வாசகர் அரங்கம்



அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் பிரதீபனுக்கு,

தங்களின் மார்ச் (பங்குனி) சஞ்சீவி பெற்றேன். முதல் இரண்டையும் விட இதுவே அதிக உழைப்பை காட்டுகின்றீர்கள். வாழ்த்துக்கள்!

தமிழக மக்கள் பத்திரிகைகள் வெளியீடு: தமிழ் வாழும் அனேக தமிழர்களை கட்டிய கொத்து முந்தயிட்டுக் கொண்டிருக்கும் காண கூட்டம் இது. அந்த கதியை போக்கவும் வாசக — இந்த கொண்டிருக்கும் வாசகர் கூட்டத்தை! தரமான இலக்கிய சஞ்சிகையின் பக்கம் பார்வையைத் திருப்பி வைப்பதென்பது மிகக் கடினமான பணியே.

அப்பணியை மேற்கொள்ளும் போது வேறு இலக்கிய வாதிகளின் வெற்றி வியர்வை சிந்தியுள்ளதில் முகம் கொடுத்தும் நிரப்பியும் இருக்கிறது. ஒரு போக்கு இலக்கியம் போலும் படிந்து போக்கு வாதிகள் மிகைப்படுத்தி, வாசகர் கருத்துக்களை ஒருபோதும் காக்க கொள்ளாமலும், பேசத் தெரிந்த இலக்கியச் சந்தர்ப்பவாதிகள், இலக்கியத்தை கொண்டு ஜீவிக்கும் வர்க்கத்தைப் போல் நடிப்பவர்கள் கூட்டம் புகழ்பவர்களும் 'தூய இலக்கிய வாதிகள்' சமகால பிரச்சனைகளை எழுதாத தேசிய பிரச்சனையை மழுங்கடிக்கச் செய்யும் போக்கு - யி தேசாபிமானத்துக்கு தூரமான இலக்கிய கர்த்தாக்கள்...... இவற்றிற்கு எல்லாம் சஞ்சீவி வளர வேண்டும், வாழவேண்டும்.

டென்மார்க்கில் தரமான இலக்கிய சஞ்சிகை அதுவும் தொடர்ச்சியாக வெளிவர வேண்டும் என்பது இலக்கிய ஆர்வலர் பலரது பேரவா. இப் பணியினை குறிப்பிட்ட காலங்கள் 'கிழிவானம்' செய்து வந்தது.

நீங்கள் கூட்டாக ஒன்றுபட்டுச் செய்வதால் சஞ்சீவி தொடர்ந்து வெளிவரும் என்பதும் சஞ்சீவி தனக்கென தரமிக்க வாசகர் கூட்டத்தை உருவாக்கும் என்பதும் என் நம்பிக்கை.

அன்புடன்
உமா சபாபதி,
FOLDBY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்பான சஞ்சிகைக்கு,

எனது மனமார்ந்த நன்றிகள். பல சிரமங்கள் மத்தியில் நேரத்தை பொருட்படுத்தாமல் சஞ்சிகையை வெளியிடும் ஆசிரியர் குழுவிற்கு எனது பாராட்டுக்கள். தரமாக வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகையில் சில தவறுகள் கவனக்குறைவால் ஏற்படுவதை தவிர்த்து விடுங்கள். இதுவே தமிழ் மக்களின் மனதை சஞ்சிகை கொள்ளை கொள்ளும் என்பதே என் எண்ணம். கிறுக்கையுந்தும் போட்டியில் அடைபட வேண்டிய ஒரு நேரம் அடைபட்டிட்டு (அதுவே வேண்டிய அவைஇடம்) இதுவே ஊக்கமளிக்கிய எமக்கு பெரும் விருப்பத்தை கொடுக்கின்றது. இதழில் ஆரு விஞ்ஞானங்களை கண்டு மகிழ்வதை போலுள்ளது. இவை தமிழ் சஞ்சிகை மிகவும் சிறப்பாகவுள்ளது. சஞ்சிகை சிறப்புடன் வெளியிட எனது வாழ்த்துக்கள்.

நன்றி.

அ. வசந்தராஜன்
Holstebro.

Der er flere telefoner i New York end noget andet sted i verden, nemlig seks millioner.

Verdens hurtigste elevtor findes i en 240 meter høj bygning i Tokio. Hastigheden er 600 m/min.,så det tager kun 24 sek. at komme til tops.

—Illustreret Videnskab—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உண்மைகள் விழித்தபோது



குமாரசாமி பல்கலைக்கழகம்.
விடுதியில் எல்லோரும் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் அதிகாலை தபால் புகையிரத வண்டி வரும் சத்தம் கேட்டு எழுந்து சுறுசுறுப்பாக தனது காலைக்கடன்களை முடித்துவிட்டு எப்போ நேரம் போகும், போகும் எனக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் தான் ரவி.

இது தான் அவனது பல்கலைக்கழக இறுதியாண்டு. அதைவிட அவனது முக்கியமான தனது ஆராய்ச்சியில் கண்டுபிடித்த இயந்திரத்தை முதன்முறையாகப் பரிசோதனை செய்து பார்க்கப் போகின்றான். அது.... அவன் நினைத்தது போல் சரியாக இயங்கிவிட்டால்....! ரவிதான் உலகிலேயே சந்தோசமான சீவன்.

அவனும் அடிக்கடி கடிகாரத்தைப் பார்க்கின்றான். ஆனால் நேரமோ ஊர்ந்து கொண்டு போகின்றது. எட்டு மணிக்கு இன்னும் முக்கால மணித்தியாலங்கள் இருக்கின்றது. தனது கட்டிலில் இருந்தபடியே தனது நண்பர்கள் எல்லோரையும் ஒருமுறை சுற்றிப் பார்க்கின்றான். ஆரம்பத்தில் அவர்கள் தன்னைப் பல வழியாலும் கேலி செய்ததை நினைத்துப் பார்க்கின்றான். "ரவி உனது ஊர் என்ன" எனக் கேட்ட போது "உருத்திரபுரம்" எனக் கூறிய போது எல்லோரும் என

தட்டிச்சிரித்து "கோகிலாம்பாள் உன் ஊர் நாகேன்" கோகிலாம்பாள் உனது சொந்தமா....?" எனக் கேலி செய்து அவனின் மனதைப் புண்படுத்தியவர்கள், இப்போது அவனது அன்பு உற்ற நண்பர்கள். தாய்தந்தை இல்லாத அவனுக்கு அவனது அண்ணனும் அண்ணியும் தான் தாய் தந்தை போல் எல்லாக் கடமைகளையும் தீர்த்து வைத்தார்கள். அவனது பெற்றோர் இருந்திருந்தால் கூட அண்ணன் அண்ணியைப் போல் அன்பு வைத்திருப்பார்களோ? தெரியாது. இப்படி பலமுறை தன் நண்பர்களுக்கும் தன் அன்புக் காதலி சுபாவிற்கும் சொல்லிப் பெருமைப்படுவான். இவற்றையெல்லாம் நினைத்துக் கொண்டிருந்ததில் நேரம் ஏழு முப்பதைத் தாண்டி விட்டதே தெரியவில்லை.

ஏழு முப்பதுக்கு அலாரம் வைத்துப் படுத்திருந்த நண்பர்கள் எழுந்து காலைக் கடன்களை முடிக்க ஓடுகின்றார்கள். ரவியும் எழுந்து தனது அலுமாரியைத் திறந்து தான் செய்து இயக்கவிருக்கும் கருவி சம்பந்தமான குறிப்புக்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். நண்பர்களும் தயார். "ரவி போவோமா" என்ற குரல் கேட்டவுடன் தன் கடிகாரத்தைப் பார்க்கின்றான். நேரம் ஏழம்பதாகிவிட்டது. விடுதியை விட்டு பல்கலைக்கழகத்தை நோக்கி நண்பர்களுடன் நடக்கும் போதே ஏனைய நண்பர்கள் வாழ்த்துத் தெரிவிக்கின்றார்கள், கழக வாசலில் விரிவுரையாளர் பரமேஸ்வரன் வாயெல்லாம் பல்லாகச் சிரித்தபடி அவனை அன்புடன் வரவேற்கின்றார். அவருக்கு தனது மாணவன் இப்படியொரு கருவியைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதில் தனிப் பெருமை.

எல்லோரும் கதைத்துக் கொண்டிருக்கையில் அவனது காதலி சுபா ஓட்டமும் நடையுமாக அவ்விடத்துக்கு வந்து எல்லோருக்கும் வந்து தனது காலை வணக்கத்தைத் தெரிவிக்கையில் நேரம் எட்டுமணியாகிவிட்டது. கழக ஆரம்ப மணியும் அடித்தது. விரிவுரையாளர் பரமேஸ்வரனுடன் சென்று வகுப்பறையில் அவரவர் ஆசனத்தில் அமர்கின்றார்கள். ரவி எலெக்ரோனிக் சம்பந்தமான சில கேள்விகள் கேட்க பரமேஸ்வரன் அதற்கான பதில்களை விபரமாக சொல்லி விட்டு கருவிக்கு பொருத்தும்

www.tamilarangam.net

சில உதிரிப்பாகங்களையும் கொண்டு வந்து கொடுத்து விட்டு மிகுதி வேலையையும் முடிக்கும் படி கூறிவிட்டு வெளியே போய் விட்டார்.

Lars:
Spørg Skolen:.....
Lars: Er du søvnig...?
elev: Nej...Jeg er Hindu...

ரவி தனது மீதி வேலையை முடிக்கத் தொடங்கினான் சகமாணவர்கள் அவனைச் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ரவி தனது முயற்சியால் அந்தக் கருவியைத் திறம்பட இயங்க வைத்துவிட்டான்.

அந்தக் கருவியை யாரை நோக்கிப் பிடித்தபடி அதிலுள்ள பச்சை நிறப் பட்டனை அழுத்தினால் அந்த நபரின் மனதில் உள்ளதை அப்படியே படம் பிடித்துக் காட்டியது போல் சொல்லிவிடும். சக மாணவர்களும் பெரிதாக ஆரவாரம் செய்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். வகுப்பில் சில மாணவர்களின் மனதை கருவியை அழுத்தி பார்த்து வகுப்பறையை அமர்க்களப்படுத்துகின்றான் ரவி.

ரவியும் அந்தக் கருவியை உடன் தனது தெய்வம் போலிருக்கும் அண்ணனுக்கும் அண்ணிக்கும் காட்ட வேண்டும் போலிருக்கவே எல்லோரிடமும் விஷயத்தைச் சொல்லிவிட்டு அன்புடன் விடைபெற்று உருத்திரபுரத்துக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கையில் சுபா தானும் வரப் போவதாக அடம்பிடிக்க சிறியவளைச் சுபாவையும் அழைத்துக் கொண்டு உருத்திர புரத்துக்குச் செல்கின்றான் ரவி. வரும் வழியில் ரவியின் மனதில் பல எண்ணங்கள் அலைஅலையாய் எழுந்து கொண்டிருந்தது.

அண்ணன் மற்றும் பெண்களின் ஆசைக் கொல்லி அண்ணியை அழைத்து கிண்டல் செய்வார். இப்போது சுபாவின் ஆசையைப் பற்றி மனதில் எப்படியும் ஏதாவது நினைப்பார். அவர் என்ன நினைக்கின்றார் என்பதைப் போனவுடனே கருவியைப் பயன்படுத்தி அறிந்து விட வேண்டும் என்ற முடிவோடு வீட்டை அடைகின்றார்கள் இருவரும். அண்ணன் சாய்மனைக் கட்டிலில் இருந்து இதமாக சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கின்றார். இருவரையும் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து ஒரு பார்வை பார்த்தார்.

www.tamilarangam.net

அதன் அர்த்தம் யார் இவன்..? என்பது போலிருந்தது. ஆனாலும் ரவி சமாளித்துக் கொண்டு சுபாவை அறிமுகம் செய்து வைத்துக்கொண்டே தம்பியின் பச்சைப் பட்டினை அழுத்தினான். அழுத்திய பின்னர் தான் தன் தான் அழுத்தினேன் என நினைத்தான்- ஏனெனில் அவன் அண்ணன் நினைத்தது இதுதான்! இவ்வளவு காசைக் கொட்டிப் படிக்க வைத்து இப்போ யாரோ ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கின்றான். நான் இவனுக்குச் செய்த செலவுகள் எல்லாம் வீணாகி விட்டதே என்ற வேதனை அவனுக்கு. ரவிக்கோ தாய்தந்தையை விட மேலாக இருந்த அண்ணன் மனதில் இப்படியொரு கீழ்த்தரமான எண்ணமா? அப்போது தான் அவனுக்குத் தன் பலன் எதிர்பார்த்துத் தான் இவ்வளவும் செய்திருக்கின்றார்கள் என்பது விளங்கியது. ரவியால் அந்த வேதனையைத் தாங்க முடியாவிட்டாலும் சமாளித்துக் கொண்டு வீட்டுக்குள்ப் போய் சுபாவை அண்ணிக்கு அறிமுகம் செய்து வைக்கின்றான். அண்ணியின் மனதை அப்போது அறிய விரும்பவில்லை ரவி.

இரவுச் சாப்பாட்டுக்கு அண்ணி அழைக்கும் போது அண்ணியின் குரலில் வழமையான உற்சாகம் இருக்கவில்லை. ரவி இப்போது அண்ணியின் மனதில் என்ன இருக்கின்றதென அறிய விரும்பி குசினியை நோக்கிச் செல்லுகின்றான். அண்ணி சாப்பாடு போடும் போது அதிலும் ஒரு சோர்வு இருந்தது. ரவி கவனமாய் இருக்கின்றான். "இவன் படிப்பை முடித்து விட்டு வேலை செய்யத் தொடங்கியவுடன் தனது தங்கைக்குத் திருமணம் செய்து வைக்கலாம் என இருந்தேன். இதற்கிடையில் இவன் ஒருத்தியைக் கூட்டி வந்திருக்கின்றான். இனி ஏன் தான் இவற்றையெல்லாம் இவனுக்கு நான் எல்லாம் அன்புடன் செய்ய வேண்டும், எல்லாமே வீணாகிப் போய் விட்டதே என மிகுந்த கவலையுடன் வேதனைப்பட்டது அண்ணியின் மனம். தன்னைப் போலவே எல்லோரும் இருப்பார்கள் என நினைக்கும் அவளுக்கு இது பெருத்த ஏமாற்றமாகவேயிருந்தது. ரவிக்கு இப்போது தன்மேலும் தன் கல்வி மேலும் வெறுப்பு ஏற்படத் தொடங்கியது.

சாப்பிட்டுவிட்டு எல்லோரும் கதைத்துக் கொண்டிருக்கையில்,

www.tamilarangam.net

சுபா இரகசியமாக ரவியிடம் " அண்ணை அண்ணியிடம் இன்றும் என் கருவியைக் காட்டவில்லை எனக் கேட்டாள். அதற்கு ரவி "ஆறுதலாகக் காட்டலாம்" எனச் சொல்லிவிட்டு படுக்கைக்குச் சென்றான். அவனுக்கு உறக்கமே வரவில்லை. மனதிலுள்ள வேதனைகளை எவ்வாறு தாங்குவது எனத் தவித்துக் கொண்டிருந்தான்.

அதிகாலை அண்ணி எழுந்து ஆரவாரப்படுவதைப் பார்த்த ரவி " அண்ணி என்ன விசேசம் எனக் கேட்க அதற்கு அண்ணி சுபாவேன இன்று புரட்டாதிச் சனி தம்பி என்றார். அண்ணியின் பதிலில் சற்றுக் கோபம் இருப்பது ரவியால் மாத்திரம் தெளிவு புரியக் கூடியதாக இருந்தது. புரட்டாதிச் சனி என்றதும் சுபாவிற்கு முக்கியமான இடம் காட்ட வேண்டும் எனத் தீர்மானித்தான். அதுதான் வரலாறு பிரசித்தி பெற்ற உருத்திரபுரச் சிவன் கோவில். புரட்டாதிச் சனி என்றால் எள்ளெண்ணெய் எரிப்பதற்காக ஏராளமான சனம் அங்கு வருவதுண்டு. அதைக் காட்டுவதற்கு சுபாவையும் கூட்டிச் செல்லும் போது தன் கருவியையும் எடுத்துச் சென்றான். கோவிலைச் சுற்றிக் காட்டி வழிபட்டதில் அவனுக்கு மனமும் சற்று அமைதியடைந்திருந்தது. இருவரும் கச்சான் கடலை வாங்கிக் கொறித்தபடி குளக்கட்டில் அமர்ந்தார்கள். ரவியின் கண்கள் நீரிலும் அதன் மேல் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் பறவைகள் மீதும் இருந்தது. சுபாவின் கண்களோ சற்றுத் தள்ளியிருந்த காதல் ஜோடிகள் மீது இருந்தது. திடீரெனத் திரும்பிய ரவி இப்போது சுபா என்ன நினைக்கின்றாள் என அறிய ஆசைப்பட்டுக் கருவியை அழுத்தினான். சுபா நினைத்தது "ரவி என்ன ஆம்பிளை ஆண் என்றால் அப்படியல்லவா இருக்க வேண்டும், மன்மதன் போலல்லவா இருக்கின்றான், அவனுடைய காதலி எவ்வளவோ கொடுத்து வைத்தவள்" என நினைத்துக் கொண்டிருப்பதை ரவி கருவி மூலம் கேட்ட போது அவனுக்கு இந்த உலகமே இருள்மயமாகிவிட்டது. ஏன்-? தான் இந்த மனித மனங்களை இப்படி எல்லாம் அறிகின்றதோ என நினைத்துக் கொண்டு தன் கருவியை கையில் எவ்வளவு வேகம் உள்ளதோ அவ்வளவையும் பயன்படுத்திக் கருவியை குளத்தை நோக்கி விட்டெறிந்தான். அதன் பின்னர் தான் அந்த அப்பாவி ரவிக்கு அறிவுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இனத்தைப் பார்க்கலாம், உன் மனதை ஒருபோதும் அறியக் கூடாது, என்பது தெரிந்தது.

முற்றும்.

(யாவும் கற்பனையே)

# அதிர்ச்சிச் சிகிச்சை


அண்மையில் பாம்பு கடிக்குப் பலியானவர்களைக் காப்பாற்ற புதிய ஒரு சிகிச்சை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. விஞ்ஞான பூர்வமான விளக்கத்துக்கு இது புறம்பாகவே இருக்கின்றது, என்று 'நியூயோர்க் டைம்ஸ்' அறிவிக்கின்றது. இதில் பாம்பு கடித்த இடத்தில் ஐந்திலிருந்து பத்து நொடிகள் இடைவெளியில் ஒரு துப்பாக்கியின் மூலமாக தொடர்ச்சியாக உயர் மின் வலிமை குறைந்த மின்னோட்ட மின்சார அதிர்ச்சி கொடுக்கப்படுகின்றது. சிகிச்சை பெற்றுக் கொண்ட 34 பேரின் விஷயத்திலும் தேவையுள்ள விஷம் அருகிவிச் செய்வது காண்பிக்கப்பட்டது.

பாம்பினால் கடிக்கப்பட்டு அரை மணி நேரத்துக்குள் சிகிச்சை அளிக்கப்படும் பட்சத்தில் அவர்களில் எவருக்குமே பொதுவாகக் காணப்படும் கவலைக்குரிய மருத்துவச் சிக்கல்கள் ஏற்படுவதோ அல்லது அவர்கள் உயிரிழப்பதோ இல்லை என்பதாக ஆராய்ச்சியாளர்கள் விளக்கினார்கள். சிகிச்சைக்குப் பின் 15 நிமிடங்களுக்குள் விஷக்கடியினால் ஏற்பட்ட வலியும் கூட மறைந்து விடுவதை ஆராய்ச்சியாளர்கள் கவனித்தார்கள். பாம்பு கடித்து இரண்டு மணிநேரங்களுக்குப் பின் தானே சிகிச்சையைப் பெற்றுக் கொண்ட இரண்டு பேரின் விஷயத்திலும் இது வேலை செய்தது. பாம்பு கடிகளோடு கூட, விஷ எறும்புகள், மற்றும் தேள் கடிகளுக்கும் கூட அதிர்ச்சி சிகிச்சையினால் வெற்றிகரமாக சிகிச்சை அளித்திடலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

-நன்றி- ('விழித்தெழு')

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி .4



சஞ்சீவி உங்களுக்காக வழங்கும் குறுக்கெழுத்துப்போட்டி, இல: 4 ற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறது: நீங்கள் செய்யவேண்டியது, குறுக்கெழுத்து வெற்றுக் கட்டங்களை, தரப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதிலை தெரிவுசெய்து பூர்த்திசெய்ய வேண்டியதே:-

கேள்விகள் "இடமிருந்து வலம்:"

1-14 சிமயம் ஐ இப்படியும் அழைப்பர், இது பிறந்த மானி வெதிகொண்டு அறியும்.

3-50, கம்பரால் எழுதப்பட்ட இக்காப்பியத்தில் அவருடைய பெயரும் சேர்ந்தேயுள்ளது.

4-17, வீட்டின் உள் நிலப்பகுதியை இப்படியும் அழைப்பர், அமெரிக்க இராணுவப் பிரிவும் ஐரோப்பிய நாடுகளும் இதனை அமைத்துள்ளது.

5-18, இதன் 12 கூட்டுகளே ஒருவருடமாகும், ஆனால் வல இடமாயுள்ளது.

7-46, நாடளாவிய பெரிய சபைகள் இப்படியழைப்பர்.

5-28, "குழந்தை" க்கு இப்படியும் ஒரு பெயர் உள்ளது, ஆனால் இது இங்கு குழம்பியுள்ளது.

www.tamilarangam.net

31-48, 'மோட்டார் வாகனத்தின் எரிபொருளான இதன் ஆங்கிலப் பதம் இதுவாகும், இது வலமிடமாயுள்ளது.

27-32 இலங்கையில் மலைகளின் பெயர்களில் முடியும் தேர்தல்தொகுதிகளுள் ஒன்றான இந்த இடத்தில் தேயிலை பயிரிடப்படுகின்றது. ஆனால் குழம்பியுள்ளது.

36-49 வேளை, நேரம் என்பவற்றை இப்படியே குறிப்பிடுவர். இது இங்கு குழம்பியுள்ளது.

41-51 மதி கெடுபவர்க்கு இது வரும் என்பது ஆன்றோர் வாக்கு. இது தனது தன்மையால் இடம்மாறியுள்ளது.

**கவனியுங்கள்:**

குறுக்கெழுத்துப்போட்டி சம்பந்தமான விளக்கமும், விபரங்களும்:

1. சஞ்சிகையின் வெளியீட்டு உறுப்பினர்கள் தவிர்ந்த யாவரும் பங்குகொள்ளலாம்.
2. போட்டியில் பங்குகொள்வோர் கட்டங்கள் அனைத்தையும் அத்துடன் சரியான முகவரியையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப் பகுதியிலுள்ள கட்டம் அச்சிடப்பட்ட பக்கத்தை பூர்த்தி செய்து 15.11.89. முன் சஞ்சிகை அலுவலகத்திற்கு (முகவரி குறுக்கெழுத்து அச்சிடப்பட்ட பகுதியில் உள்ளது) அனுப்பிவைக்கவும்.
3. வாசகர்கள் யாவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம், ஆனால் இதழின் அசல் பிரதியே ஏற்றுக்கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் பத்திரிகைக் குழு நடுவரால் தெரிவு செய்யப்படும்.
5. விதிமுறைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
6. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
7. சரியான விடையும், பரிசு பெற்றோர் விபரங்களும் அடுத்த இதழில் வெளியிடப்படும்.
8. பரிசுகள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

<u>கேள்விகள்</u> 'மேலிருந்து கீழ்'

1-5 நவரத்தினங்களில் ஒன்றான இது, சில பெண்களின் பெயராகவுமுள்ளது.

7-11 இது தமிழர் பயன்படுத்தும் ஒரு தொலைக் கருவியாகும்.

18-14 முக்கனிகளில் இதுவுமொன்று.

20-21 ஒருவரினது உடைத்தான நிலத்தை இப்படியழைப்பர்.

24-25. இது நவக்கிரகங்களில் ஒன்று.

29-27 தமிழர் பிரதேசங்களில் விழாக்கள் எடுக்கும் போது இந்த இலை பெரிதும் பயன்படும்.

33-31 மஞ்சள் பூப்பூக்கும் இந்தச் செடியே சாக்கின் மூலம்.

33-37. காச நோய்க்கு இப்படியுமோர் பெயருண்டு.

www.tamilarangam.net

இது இங்கு இடம்பெற்றுள்ளது.

44-40 இலங்கையின் வட பகுதியிலுள்ள இந்த இடம் அதிகமான சிப்பிகளுள்ளதால் இதன் காரணப்பெயர் கொண்டே ______ 'காடு' என அழைக்கப்படுகிறது. இது இங்கு இடம்பெற்றுள்ளது.

48-52 யேசுநாதர் பிறந்த இந்தத் திருநாள் இங்கு இடம்பெற்றுள்ளது.

சஞ்சீவியின் கு.எ. போட்டியிற் கலந்து கொள்வோர் இதழின் இறுதிப்பக்கத்திலுள்ள நயமான கட்டத் தாளினை வெட்டி எடுத்து முத்திரை ஒட்டி, அழகாக பெயர், முகவரியினை எழுதி அனுப்பிவைக்கும்படியும், கு.எ.போ. இல: 3 ல் தவறுதலாக 43ம் இலக்கக் கட்டத்தினை நிரப்பவில்லை. தவறுக்கு வருந்துகிறோம். கு.எ. போட்டி இல: 4ன் புதிய வடிவம் பற்றிய உங்கள் கருத்தினை எதிர்பார்க்கிறோம்.

"சஞ்சீவி"யின், மலர் 3ன், குறுக்கெழுத்துப் போட்டியின் விடைகளும், சரியான விடைகள் எழுதியவர்களில் பரிசுகள் பெற்றுக்கொண்ட மூவரின் பெயர் விபரங்களும்.

குறுக்கெழுத்துப் போட்டி. 3

KRYDS OG TVÆRS.



**இடம்-வலம்.**

1. ஊர்வசி
6. சாகயோகி
10. துவாரகை
15. குக்கல்
19. படகு
23. பாங்கி
31. கோகுலம்
37. திலகம்
44. காவி.
47. வனபரிபாலகர்
55. மருடி
59. பாசி
64. விசயன்
71. கரு
77. சஞ்சீவி.

**மேல்-கீழ்.**

1. ஊதுபத்தி
2. (—)
3. வரகு
4. சிகை
6. பாஞ்சாலங்குறிச்சி
7. யோகீஸம்
8. கஞ
23. பாகு
31. கோபம்
36. பீகார்
38. லவகுச
39. கனடியர்
44. விகடகவி
50. பாரி
55. மனைவி.

1.
S.Anusha
Fyernsgade 1.1sal
7600 Struer.

2.
V.Eranjinee
Å gade 10 st
7500 Holstebro.

3.
D.Sugendra
Jernbanegade 10 a
9600 Års.

www.tamilarangam.net

# சிரிக்கச் சிந்திக்க சிக்கனம்.

-முரளி-

Fotex மார்க்கற். அன்று ஓர் வெள்ளிக்கிழமை, சனம் நிறைந்து வழிந்தது. "டேய்"..... குரல் வந்த திசை கேட்டுத் திரும்பினேன். சுரேஸ் ஒரு அழகான தமிழ்ப் பெட்டையோடு நின்றான்.

"என்ன மச்சான் ஆளே மாறிப் போனாய், அடையாளமே தெரியாமல்ப் போனாய்.... அப்படி என்னதான்ரா சாப்பிடுகின்றாய்? என்றான் சிரித்துக் கொண்டே.

"சொன்னாப் போலே மறந்தே போனேன் இதுதான்ரா என்ர மனுசி, போன வாரம் தான் இங்கை வந்தவ, போன சமருக்கு இந்தியா போய்த் திருமணம் செய்து வந்தேன்".... என அடுக்கடுக்காய் எடுத்து விட்டான். "அது சரி என்னடா இந்தப்பக்கம்" சுரேஸ் வினவினான். "சும்மா இந்தப் பக்கம் வரவேணும் என்று வந்தனான்," என்றேன்.

"பார்த்தாயா மச்சான் ஜேர்மனியிலிருக்கும் நான் கொல்லைப்புறவிலிருக்கும் நீயும் எவ்வளவோ காலத்துக்குப் பின்னர் சந்திக்கின்றோம். கிட்டத்தட்ட இரண்டு வருடம் இருக்கும் என்னடா" என்றான் சுரேஸ். இருக்கலாம் என்பது போலத் தலையசைத்தேன். "அது சரி என்னடா கையும் கழுத்திலேறுமாக நிற்கிறாய்".

நிமிர்ந்தபடியே "சும்மா தொங்கிப் பார்க்கத்தான்" என்றான் இழுத்துக் கொண்டே.

"டேய் விடாதே .. இதுக்கையென்ன கிணக்கி, கழுத்திலேற்றாய்." அவனை விடாது குடைந்தேன்.

"இவர் சொன்னாலும் கேட்கிறாரில்லை இவர் தொட்டெடுத்தாலும் இப்படித்தான்" அவனது மனைவி ஏதோ நீட்டி இழுத்தாள்.

"இல்லை மச்சான் நான் ஒவ்வொரு சாமானுக்கும் இலங்கைப் பெறுமதி பார்த்துத்தான் செலவழிக்கின்றேன்" என்றான். அவனது மனைவி வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

எனக்குச் சிரிப்புத் தாங்கமுடிய

www.tamilarangam.net

விம்மி.
டேய் இதுக்கேன்ரா போய்ச் சிரிக்கின்றாய் .... இதில என்னடா சிரிக்க வேண்டியிருக்கு ... டேய் நீயும் என்னைப் போன்ற காலகட்டத்திலே தானே இங்கே வந்தனி... உனக்கென்டோ அல்லது குடும்பத்துக்கென்டோ என்னத்தைடா சேர்த்து வைத்திருக்கின்றாய்-----. "மச்சான் நீ என்னதான் நினைக்கின்றாயோ தெரியாது எங்கட நாட்டு நிலைமைகளுக்கும் குடும்பச் சூழ்நிலைகளுக்கும்" நான் ஒரு மாதிரி சில விசயங்களைக் கட்டுப்படுத்தித்தான் வாழ வேண்டும், போன வருடமளவில் அக்காவுக்கு ஒரு வீடு கட்டிக் கொடுத்துள்ளேன். அத்தோடு தம்பியொருவனையும் ஜேர்மனிக்கு கூப்பிட்டு விட்டுள்ளேன், டேய் இன்றைக்கு நாளைக்கு நாலுபணம் சேகரிக்க வேண்டும் என்பதற்காக சில ஆட்களைப் போல் கள்ளத்தனமான வழிகளிலோ அல்லது வட்டிக்கு கொடுத்தோ அல்லது சாப்பிடாமல் இருந்தோ நான் சேகரிக்கவில்லை, சேகரிக்க விருப்பமும் இல்லை, ஏதோ நான் கஸ்டப்பட்டு உழைக்கின்ற கிடைக்கின்ற வருமானத்திலே தான் இப்படி மிச்சப்படுத்த முயலுகின்றேன்."

"டேய் இதை மட்டும் நல்லா யோசி நீ... இன்றைக்கு இப்படியாக சகல சௌபாக்கியத்தோடயும் வைத்திருக்கும் இந்த நாடு எம்மை நாளைக்குத் திருப்பியும் அனுப்பலாம், அப்படித்தான் இவ்வேளை திருப்பி அனுப்பிவிட்டால் முன்பு போல் நாம் சந்தியிலே போய்த்தான் நிற்கவேண்டும். நிற்கத்தான் முடியுமா---? யார் தான் எம்மை மதிப்பார்கள் - கொஞ்சம் யோசித்துப் பார்.... உன்னை கொப்பர் தான் இனிமேலும் உன்னைப் பார்ப்பாரோ....? ஏதோ முடிந்தா நீயும் ஏதோ மிச்சம்பிடிக்கப் பார்....

எனக்கெல்லாம் தலையே சுற்றுவது போலிருந்தது. இவனை ஏன்ரா இப்போ சந்தித்தேன் என்பதுபோலாகிவிட்டது. "மச்சான் பிறகு சந்திப்போம்" என்று சொல்லிக்கொண்டு மெல்லென நகர்ந்தேன்.

குளிர்ப் பையை எடுத்து வண்டியில் போட்டு விட்டு ஏதோ கற்பனைகளில் தனித்து விட்டு தாத மணியைக் கொட்டுகின்றான். 'இந்தளவு பணம் செலவழித்து தேத்தண்ணியா? இருக்க வேண்டியிருக்கு' என்றும் இந்திரனின் குரல் திரை இரைச்சலோடு இரைச்சலாய் என் காதுகளில் வீழ்ந்தது.

முற்றும்

www.tamilarangam.net




## சிறார்களின் சிந்தனைக்கு!

1. உலகத்திலேயே பெரிய நதி எது? அது எங்கேயுள்ளது?
2. எந்தக் கிரகம் தன்னைச் சுற்றி வளையம் கொண்டுள்ளது?
3. உலகத்திலேயே நீண்ட மலை எது? உயரமான மலை எது? அவை எங்கேயுள்ளது?
4. உலகத்திலேயே நீண்ட நதி எது? அது எங்கேயுள்ளது?
5. மெக்சிக்கோவிலுள்ள இரண்டு பழைய நாகரீகங்கள் எவை?
6. ஸ்கன்டிநேவியாவிலுள்ள நாடுகள் எத்தனை? அவைகளின் பெயர்கள் என்ன?
7. சூரியனுக்கு மிக அண்மையிலுள்ள கிரகம் எது?
8. டென்மார்க்கில் எங்கே முதன் முதலில் நடைபாதை (gådade) அமைக்கப்பட்டது.
9. "நெற்றோ" என்பதன் முழுப் பெயர் என்ன?
10. எமது சூரிய குடும்பத்தில், பெரிய கிரகம் எது?

**மூன்றாவது மலரில் வெளியான கேள்விகளுக்குச் சரியான பதில்கள்.**

1. மேரிக்கியூரி அம்மையார்.
2. திமிங்கிலம்.
3. கிறீன்லாந்து (Grønland)
4. இரஷ்யா
5. 11,000 பாகை பரனீட்.
6. ஆம்ஸ்ரிக்தீம்கோதி.
7. வெறன்றி போட்
8. ஸ்விப்ட (மணிக்கு 171 கிலோ மீற்றர்)
9. சேர் ஐசாக் நியூட்டன்.
10. அலெக்சான்டர் கிரகம் பெல்.

www.tamilarangam.net

VED DU DET?-------.

1. Hvad hedder verdens største flåde? Hvor ligger det hen?
2. Hvad hedder verdens længste bjerg? og det højeste bjerg? Hvor ligger de hen?
3. Hvad hedder verdens længste flåde? Hvad ligger den hen?
4. Hvad hedder de to gamle civilizationer, der var i mexico?
5. Hvor mange lande er der i Skandinavien? og Hvad hedder det?
6. Hvor blev DK's første gågaden bygget (lavet)?
7. Hvad står NATO for? North Atlantic Treaty Organization.
8. Hvilket Planeten, som har ringe omkring sig selv?
9. Hvilket Planeten der ligger nærmest til Solen?
10. Hvilket Planeten er største i vores Sol system?




ஒருவர்: என்னடா நீங்கள் கொஞ்சம் குறைச்சுக் கேட்கமாட்டியளோ இந்த ரேடியோவை...

மற்றவர்: நான் நினைக்கிறன் உதுகள் பிறந்த 31க்கு வதப்பிக்கள் பிடித்துத்தானே தொட்டிலில போட்டதுகள் போல கிடக்கு....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆலமரமும் நாணலும்



பல மரங்கள், செடிகள், புல், பூண்டுகள் செழித்து வளர்ந்து வந்தன. அந்த இடத்தில் பருத்த வேர் செறிந்து கடும் வெள்ளத்தாலும் பிடுங்க முடியாத ஓர் பெரிய ஆலமரம் நின்றது. அதன் கிளைகள் நீண்டு பரந்து வளர்ந்திருந்தன. அந்த ஆலமரத்தின் கீழே ஓர் சிறிய நாணற் புல் வளர்ந்து வந்தது.

ஒரு நாள் ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் கரை புரண்டு ஓடியது. அந்த நாணற் புல் வெள்ளம் ஓடிய பக்கமாக வளைந்து நின்றது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஆலமரம் நாணற் புல்லைப் பார்த்து நண்பா, உன் உடம்பில் சக்தி யில்லை. அதனால் தான் நீ வெள்ளம் ஓடும் பக்கமாக சாய்ந்து நிற்கின்றாய். என்னைப் பார், நான் வெள்ளம் ஓடும் போது தைரியத்துடன் அதை எதிர்த்து நிற்கின்றேன். ஏனென்றால் என் உடம்பில் சக்தியுள்ளது என்று தன்னைத் தானே புகழ்ந்து பேசியவாறு அந்த நாணற் புல்லைப் பார்த்து சிரித்தது. இதையெல்லாம் காதில் போடாத மாதிரி நாணற் புல் நின்றது.

சில நாட்களின் பின் காற்றும் மழையும் விடாமல் பெய்து கொண்டிருந்தது. ஆலமரம் அதை எதிர்க்க சக்தியின்றி கீழே விழுந்தது. இதைப் -

www.tamilarangam.net

பார்த்து நாணற்புல் சொன்னது ஒரு நாள் நீ என்னை-
-ப் பார்த்து ஏளனம் செய்தாயே. இப்போது
எங்கே போய் விட்டது உன் சக்தி என்று சிரித்த
வாறு கேட்டது. ஆலமரம் மௌனமாய் இருந்தது.
நான் என்ற இறுமாப்பு கொள்வது [illegible]
[illegible] என ஆலமரம் மனதிற்குள் எண்ணி-
-யது.

-ரேகா.
-ஹொல்ஸ்ரெப்புரோ.

Der var mange træer og højt græs på et sted.Der var også et enormt stort træ som man ikke kunne omfarne med hænderne.Det's grene voksede langt.Der var et "lille græs"under det store træ.

En dag gikfloden over sine bredder og vandet løb hen til det store træ og det "lille græs".Men det "lille græs" lå ned på jorden i den retning som vandet løb.Efter at alt vandet løb væk stod det "lille græs" op som før.Men det store træ holdt øje med det "lille græs" og sagde "du har ikke så mange kræfter som mig,derfor lå du ned på jorden i den retning som vandet løb.Du kan se at jeg kan stå imod,når vandet kommer fra floden.Det er fordi jeg har så mange kræfter". Sådan pralede det store træ af sig selv og grinede af det"lille græs".

Efter få dage regnede det meget med storm i mange dage i træk.Så væltede det store træ ned uden at bruge sine kræfter imod stormen.Så sagde det "lille græs" med et grin" der var en dag da du drillede mig, men hvor er dine kræfter nu?"


Det store træ holdt mund og tænkte ved sig selv af man ikke skulle være hovmodig.

(Oversat fra Tamilsk til Dansk af "Maty.Jeyaratnam"

www.tamilarangam.net

## "K.MAHENDAN, SUKIT OG KUMAR'S HISTORIE"

Engang boede der en trold og en nisse inde i skoven. Der kommer mange mennesker i skoven, og troiden fanger bare alle menneskene. Trolden har en pistol, og han siger hit med pengene.




Engang kom der en jæger ind, og nissen blev helt rød i hovedet og bange, fordi han troede, at jægeren ville skyde ham men jægeren ville skyde tiger og løver.




Trolden mødte tigeren og blev grøn i hovedet af forskrækkelse så kom jægeren og skød tigeren, og heldigvis skød han også trolden.




Nu er nissen og menneskene glade, fordi trolden er væk for nissen og menneskene var nemlig gode venner.

Der var bare en lille troldunge tilbage, og den blev meget stor, men den var gode venner med både menneskene og med nissen, og den blev gift med en sød troldepige.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SANTHIRIKA OG SEYAS FORTÆLLER"

Vi går i 1. b. på struer østre skole.

Vi har altid lektier for om man-dagen. Vi har lært bogstaverne i, o, ø, s og t, og vi har lært sange om bogstaverne.

Hver torsdag er vi sammen med en 2. klasse i 2 timer ude i den lille aulæ. Der har vi spillet nogle spil, leget"banke banke bød", og vi har også spillet bold.

Tre timer om ugen er vi til ekstradansk sammen med en lærer, der hedder Randi.

Hver mandag går seyas til tamilsk i 3 timer her på skolen




கடந்த இதழ்கள் மூன்றிலும் "சஞ்சீவி" சிறார்களின் சிந்தனைக்காக 10 பொதுக் கேள்விகளை விடுத்திருந்தது. இதழ் 2 இல் விடுக்கப்பட்ட 10 பொதுக் கேள்விகளுக்கும் எந்தச் சிறார்களும் பதில் அனுப்பி வைக்காதது கவலைக்குரியதே. இதழ் 3 ற்கு குறித்து ஒர் சிறார் மட்டுமே பதில் அனுப்பி வைத்திருந்தமை மகிழ்ச்சியான உள்ளது. இதழ் 3 ன் 10 பொதுக் கேள்விகளின் சரியான பதில் அனுப்பிய செல்வி சாரதாதேவி. B (கொல்ஸ்ரு) க்கு சஞ்சீவி வாழ்த்துகின்றது.

www.tamilarangam.net

## எக்ஸ் கதிர் வரலாறும் அதன் பயன்களும்
(சென்ற இதழ் தொடர்ச்சி)

எக்ஸ் கதிர்கள் உண்டாக்கும் விதம்.


① குழாயினுள் காற்றின் அழுத்தம் குறைவாக இருத்தல் வேண்டும்.

② மின்னிகள் விரைவைக் கூட்டவும், மிகுந்த அளவு மின்னிகள் உண்டாக்கவும், நேர்மின்வாய், எதிர்மின்வாய் இவற்றிற்கிடையே அதிக மின்னழுத்தம் இருத்தல் வேண்டும்.

எக்ஸ் கதிர்கள் பழைய முறையான வாயுக்குழாயைக் கொண்டும், புதிய முறையான கூலிட் குழாயைக் கொண்டும் உண்டாக்கப்படுகின்றன.

① பழைய முறையான வாயுக் குழாய் கொண்டும்.

② புதிய முறையான கூலிட் குழாயைக் கொண்டும்.




C - எதிர்மின்வாய்
B - செப்புக்கம்பி
A - நேர்மின்வாய்
T - உலோக இலக்கு
$E_1, E_2$ மின்வாய்கள்.

ஓர் அகன்ற கண்ணாடிக் குமிழில் உள்ள காற்று முற்றாக நீக்கப்பட்டு பூட்டப்படுகின்றது. இதிலுள்ள காற்றின் அழுத்தம் .001 மில்லி மீற்றர் பாதரசம் அளவுக்கு இருத்தல் வேண்டும். வாயுக்குழாயின் எதிர் மின்வாய் (Cathode) C உட்புறம் குழிவாயும் அதிக மின்னணிகள் அதிகவிரை-வுடன் வெளியேற்றும் திறமையுடையதாயும் உள்ளது. இது படத்திற் காட்டியபடி அமைக்கப்பட்டுள்ளது. 'B' என்ற செப்புக்கம்பி, குழாயின் மறு நேரத்தில் பொருத்தப்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டிருக்கின்றது. மின்னிகளைத் தடுத்து நிறுத்தும் உலோக இலக்கு (Target) ஒன்று குழாயின் உள்முனையில் பொருத்தப்பட்டிருக்கின்றது. இவ்வுலோக இலக்கு டங்ஸ்டன் அல்லது பிளாட்டினம் உலோகத்தினால் ஆனது. இது எதிர்மின்வாய்க்கு நேர் எதிரே இருக்கின்றது. இதன் பரப்பு குழாயின் அச்சிற்கு 45° சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. நேர்மின்வாய் A யுடன் வெளிப்புறமாக இணைக்கப்பட்டுள்ளது. நேர்மின்வாய் தனிமையாக இருப்பதால் செயல்திறமை அதிகமாக இருக்கும்.

இக்குழாய் 30000 முதல் 50,000 வோல்ட்டுக்கள் வரை மின்னழுத்தம் உண்டாக்கக் கூடிய தூண்டுச்சுருள் கருவியால் (Induction coil) இயக்கப்படுகின்றது. நேர்மின்வாய்க் குழாயின் நேர்மின்வாயுடனும் எதிர்மின்வாய்க் குழாயின் எதிர்மின்வாயுடனும் இணைக்கப்படுகின்றது. தூண்டுச் சுருள் இயங்க ஆரம்பித்தவுடன் C என்ற எதிர்மின்வாயிலிருந்து மின்னணுக்கள் வெளியே வீசப்படுகின்றன. எதிர்மின்வாய் குழிவாக இருப்பதால் மின்னணுக்கள் உலோக இலக்கின் மீது குவிகின்றது. மின்னணுக்கள் அதிவேகத்தில் செல்லுகின்றன. மிகவிரைவாகச் செல்லும் மின்னணுக்கள் உலோக இலக்கின் மீது மோதித் திடீரென நிறுத்தப்படுவதால் மின்னணுக்களின் இயக்க ஆற்றல் (kinetic energy) உலோக இலக்கைத் தூண்டி எக்ஸ்க் கதிர்களை வெளியிடச் செய்கிறது.

மின்னிகள் மிகவிரைவாகச் சென்று ஒருபொருள் மீது தாக்கும் போது அதிக அளவில் வெப்பத்தை உண்டாக்கிறது. எனவே மின்னணுக்கள் குவியும் இடத்தில் அமைந்துள்ள உலோகம் மிக எளிதில் உருகாத டங்ஸ்டன் அல்லது பிளாட்டினத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. மின்னணுக்களின் தாக்குதல்களால் ஏற்படும் வெப்பத்தை எளிதில் வெளியே கடத்துவதற்குச் சாதகமாக எளிதில் கடத்தியான செப்புக்கம்பியுடன் உலோக இலக்கு இணைக்கப்பட்டிருக்கின்றது. செப்புக் கம்பி வெப்பத்தை எளிதில் வெளியே கடத்துகின்றது.

www.tamilarangam.net

மின் அணுக்கள் குவியப் பெறும் இலக்காக உள்ள உலோக இலக்கு பின்வரும் பண்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

1. உயர்ந்த உருகு நிலையுள்ள உலோகமாயிருத்தல் வேண்டும்.
2. அணுவெண் அதிகமாகவுள்ள உலோகமாக இருத்தல் வேண்டும். அவ்வெண் அதிகமாக இருந்தால் எக்ஸ் கதிர்களும் அதிகளவில் உண்டாகின்றன.
3. இலக்குக்கிற் பயன்படுத்தப்படும் மூலப் பொருளின் ஆவியழுத்தம் மிகக் குறைவாக இருத்தல் வேண்டும்.
4. அவ்வுலோகம் எளிதில் கடத்தியதாகவும் இருக்க வேண்டும்.

## கடின, மென் எக்ஸ் கதிர்கள்.

குழாயில் வாயுவின் அழுத்தம் மிகக் குறைவாக இருந்தால் எக்ஸ் கதிர்கள் உண்டாக்க அதிக மின்னழுத்தம் தேவைப்படுகின்றது. அப்பொழுது உண்டாகும் எக்ஸ் கதிர்களுக்கு ஊடுருவிச் செல்லும் திறன் அதிகமாக இருக்கும். ஆற்றலும் மிகுந்திருக்கும் இக்கதிர்களைக் கடின எக்ஸ் கதிர்கள் எனவும், குழாயிலுள்ள வாயுவின் அழுத்தம் மிகக் குறைவாக இல்லாமல் இருப்பின் ஊடுருவிச் செல்லும் திறன் குறைந்த எக்ஸ் கதிர்கள் உண்டாகின்றன. இவை மென் எக்ஸ் கதிர்கள் என்று அழைக்கப்படும்.

கண்ணாடிக் குழாயும் மின் வாய்களும் காற்றுக்களை ஓரளவு இழுத்துக் கொண்டே இருக்கின்றன. மேலும் இக்குழாய் வெகுநேரம் வேலை செய்தால் குழாயினுள் இருக்கும்வாயு அணுக்கூட்டங்கள் குறைகின்றது. இதனால் வாயுவின் அழுத்தம் வரவரக் குறைந்து இயக்கம் தடைபடுகின்றது. இதனால் குழாயை மிருதுவாக்குவதற்கு தகுந்த ஒரு சாதனம் இதில் அமைக்கப்பட்டுள்ளது. சில வாயு இழுக்கப்படுகின்ற பல்லாடியம் மென் தகடுகள் (Palladium Foils) குழாயில் பொருத்தப்பட்டுள்ளன. இக்குழாயில் $E_1 E_2$ என்ற இரு மின் வாய்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. $E_1 E_2$ என்ற இரு மின் வாய்களும் A, C இவற்றுடன் முறையே இணைக்கப்படுகின்றன. இதனால் A, C, க்கிடையில் இருக்கும் மிகுந்த மின் அழுத்தத்தினால் $E_1 E_2$ இவற்றுக்கிடையே ஒரு

தொடர்ச்சி பக்கம் 42



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித வேழமே வேட்கைப்பு

ஆதவன்

பிணக் குவியல்களினூடே
புத்தன் சிரிக்கிறான்.
பிணக் குவியல்களினூடே
புத்தன் சிரிக்கிறான்.
பரசூட்டில் இறங்கும் இந்திய சிப்பாய்களினூடே
காந்தியும் பலமாகச் சிரிக்கிறான்.
இஸ்ரேலிய மொசாட்களினூடே
யேசுவும் பலமாகச் சிரிக்கிறான்.

கீழைத்தேச மதத்துக்கு விளக்கம் சொன்னோர்
அகிம்சை நெறியை — நடைமுறையில்
கைகொட்டிச் சிரித்தார்கள்
உலகமும் சிரித்தது; சிரிக்கிறது; சிரிப்போம்
நாங்களும் சிரிப்போம்

குண்டுகள் வீழ்ந்து
மனிதர்கள் சாகட்டும்;
துப்பாக்கி வெடித்துச்
சிதறட்டும் உடல்கள்
சிரிப்போம்.
சிரிப்போம்.

புத்தன், காந்தி, யேசு சிரிக்கும் போது
நாம் மட்டுமென்ன!
சிரிப்போம்.

தத்துவங்கள் வாழ்வதற்காக
மானுடர் செத்தனர்
தத்துவங்கள் வாழ்வதற்காக
மானுடர் செத்தனர்
தத்துவங்களே செத்த பின்பு
செத்தவருக்கு என்ன அர்த்தம்
எல்லாமே கேலிக் கூத்து

www.tamilarangam.net

பாரத மாதாவிடம் தஞ்சம் கேட்டோம்
மாதாவே வேலியடைத்தாள்
மாதாவே வேரறுத்தாள்
சீரடா மாண்டிடா
பாரடா மாண்டிடா
இந்தியத்தின் போர்வேகம்

